

பரிசுத்த பர்வதங்களில் இருக்கிறது

Glorious Things Are Spoken of You, O Zion

Album 22 Song 6

Song 6 பரிசுத்த பர்வதங்களில் இருக்கிறது

Psalm 87 – Celebration of Zion as the glorious city of God. The Lord loves the gates of Zion more than all other dwellings. People from all nations will be registered as born in Zion.

பரிசுத்த பர்வதங்களில் இருக்கிறது
எந்தன் கர்த்தருடைய அஸ்திபாரம்
சீயோனின் வாசல்களில் பிரியமானார்
தேவனின் நகரமே மகிமையானது

தேவனின் நகரமே கர்த்தரின் மகிமையே
பரிசுத்த பர்வதமே கர்த்தரின் அஸ்திபாரமே
சீயோனின் வாசலே கர்த்தரின் பிரியமே
எங்கள் ஊற்றுகளெல்லாம் உன்னில் இருக்கிறது

இன்னான் எங்கே பிறந்தான் என்று தேவன் அறிவார்
கர்த்தரே ஜனங்களின் பெயர்களை எழுதுவார்
இன்னான் இன்னான் சீயோனில் பிறந்தான் -என்று
அவர்களை கர்த்தரே தொகையிடுவார்

தேவனின் நகரமே கர்த்தரின் மகிமையே
பரிசுத்த பர்வதமே கர்த்தரின் அஸ்திபாரமே
சீயோனின் வாசலே கர்த்தரின் பிரியமே
எங்கள் ஊற்றுகளெல்லாம் உன்னில் இருக்கிறது

உன்னதமானவர் பிறப்பை ஸ்திரப்படுத்துவார்
பாபிலோனியரையும் குறித்துப் பேசிடுவார்
புற ஜாதியரிலுங்கூட பெயர் சொல்லி பிறப்பைத் தருவார்
எங்கள் சந்ததிகளெல்லாம் கர்த்தரில் இருக்கிறது

KJC-DNN

தேவனின் நகரமே கர்த்தரின் மகிமையே
பரிசுத்த பர்வதமே கர்த்தரின் அஸ்திபாரமே
சீயோனின் வாசலே கர்த்தரின் பிரியமே
எங்கள் ஊற்றுகளெல்லாம் உம்மில் இருக்கிறது

KJC-DNN

